# <u>In the Court of the District Munsif, Eraniel</u>

**Original Suit No. 71/2017** **Date:10.02.2026.**

**(PW1)-** ஜாண் வர்கிஸ்

<u>**பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை தெடர்ச்சி</u>

1. எனது சொந்த ஊர் எது என்றால் மேக்காமண்டபம் ஆகும். பட்டிகை சொத்தில் இருந்து எனது வீட்டிற்கு எவ்வளவு துரம் இருக்கும் என்றால் 18 கி.மீ இருக்கும். எனது சொந்த ஊரான மேக்காமண்டபத்தில் எனக்கு வீடு உள்ளதா என்றால் சொந்த வீடு இல்லை ஆனால் சர்ச் வீட்டில் தங்குவேன். எனது மனவைி குழந்தைகள் மேக்கா மண்டபத்தில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அங்குள்ள வீட்டிலும் குடியிருப்போம் குளச்சலில் உள்ள வீட்டிலும் குடியிருப்போம். எனது, மனைவி மற்றும் குழந்தைகளின் ஆதார் அடையாள அட்டையில் மேக்காமண்பத்தின் முகவரி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. எனது குழந்தைகள் மேக்காமண்டபத்தில் அருகில் உள்ள பள்ளியில் தான் படித்து வருகிறார்கள் என்றால் குமாரகோவில் படித்து வருகிறார்கள். நான் குறிப்பிட்டுள்ள அறக்கட்டளை எந்த விலாசத்தில் உள்ளது என்றால் மேக்காமண்டபம் விலாசத்தில் உள்ளது. வழக்கு பட்டிகை சொத்தை நான் கிரயம் பெறும் சமயத்தில் ஒரு வீடு இருந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கிரய பத்திரத்தில் மேற்படி சொத்தில் வீடு இருக்கும் விபரம் துலங்கும் என்றால் சரிதான். நான் எந்த வருடம் மேற்படி சொத்தை கிரயம் பெற்றேன் என்றால் 2001 ஆம் வருடம் கிரயம் பெற்றேன். அதன் பின் குளச்சல் பகுதியில் நான் ஏதேனும் சொத்து வாங்கினேனா என்றால் வாங்கினேன் ஆனால் தேதி வருடம் நியாபகமில்லை. மேற்படி நான் குறிப்பிடும் சொத்துக்கள் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் அறக்கட்டளையின் பெயரில் வாங்கப்பட்டது. நான் குறிப்பிடும் அறக்கட்டளையின் பெயர் என்ன என்றால் Faith in Action Minstries ஆகும்.

3. மேற்படி அறக்கட்டளையின் நோக்கம் என்ன என்றால் நற்கிரியையும், கிறிஸ்தவத்தை பரப்புவது ஆகும். இந்த வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் தபசில் சொத்தில் ஒரு வீடு இருந்தது என்றால் சரிதான். மேற்படி வீடு யார் பெயரில் அனுமதி பெற்று கட்டப்பட்டது என்றால் அறக்கட்டளையின் பெயரில் கட்டப்பட்டது. மேற்படி வீடு காண்கீரிட் வீடா அல்லது ஓட்டு வீடா என்றால் காண்கீரிட் வீடாகும். மேற்படி வீட்டிற்கு

எந்த பஞ்சாயத்தில் எந்த ஆண்டு யாரால் விண்ணப்பம் கொடுக்கப்பட்டு அனுமதி கொடுக்கப்பட்டது என்றால் ரீத்தாப்புரம் பஞ்சாயத்தில் 2001 ஆம் வருடம் அறக்கட்டளையின் பெயரில் விண்ணபம் கொடுக்கப்பட்டது.

4. மேற்படி அனுமதியானது வீடு கட்டுவதற்காக பெறப்பட்டு உள்ளதா என்றால் வீடு கட்டுவதற்காக தான் பெறப்பட்டுள்ளது. மேற்படி வீட்டின் கதவு எண் என்ன என்றாலும் அது எப்போது வழங்கப்பட்டது என்றாலும் கதவு எண் 2/14 பி ஆகும் அதில் சுமார் 2001 கொடுத்திருப்பார்கள். தபசில் சொத்தை சுற்றி வீடுகள் அதிகம் உள்ள குடியிருப்பு பகுதி என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் அனைத்து பகுதிகளிலும் வீடு கட்டி மக்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.